நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வானூர்
முன்னிலை:- திருமதி.N.பீரித்தி, B.A., B.L.
குற்றவியல் நீதித்துறை நடுவர், வானூர்
2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30-ம் நாள் வியாழக்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 406/2025
C.N.R.No.TNVP36001679-2025

அரசுக்காக.
காவல் உதவி ஆய்வாளர்,
ஆரோவில் காவல் நிலையம்,
குற்ற எண்.36/2025 .... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

| | |
|---|---|
| எதிரி | குணசேகரன் (எ) மீன்சேகர்(41/2025), த/பெ. தாண்டவராயன், எண்.8, மாரியம்மன் கோயில் தெரு, வாழப்பட்டாம்பாளையம், வானூர் தாலுக்கா. |

CASE SUMMARY

| S.No. | Particulars | Report |
|---|---|---|
| 1. | The period of remand of the accused | Accused Remanded on 23-01-2025 and released on bail 01-02-2025 |
| 2. | The date of filing of the complaint/final report in the Court | Date of filing final report on 22-08-2025 Taken Cognizance on 22-08-2025 |
| 3. | The date of committal of the case to the Court of Session | Not Applicable |
| 4. | The date of 1st questioning of the accused under Sections 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | Accused questioned on 29-01-2026 |
| 5. | Filing of all miscellaneous petitions | Nil |

| | | |
|---|---|---|
| | and their results including the results on challange before superior courts: except routine petitions like petitions under section 317 of the Code: | |
| 6. | Date of examination in – Chief and cross – Examination of a Witness | P.W.1 - Chief and Cross Examined on 07-04-2026<br>P.W.2 - Chief and Cross Examined on 07-04-2026<br>P.W.3 - Chief and Cross Examined on 07-04-2026<br>P.W.4 - Chief and Cross Examined on 28-04-2026<br>P.W.5 - Chief and Cross Examined on 29-04-2026 |
| 7. | Date of examination of the accused U/Sec.313 of the Code | 29-04-2026 |
| 8. | Details of abscondence of an accused and his appearance / production, as the case may be ; and NBW pending/recalled | Nil |
| 9. | Grant of stay by superior Courts and the results thereof | Nil |

இவ்வழக்கு 22/08/2025ம் தேதி இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அது முதல் இந்நீதிமன்றத்தில் கவனமாக பரிசீலனையில் இருந்து வந்து குற்றம் முறையிடுவோர் தரப்பில் அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் திரு.ராஜசேகர் நிலை 1 அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ராஜேஷ் ஷர்மா அவர்கள் முன்னிலையாகியும், இன்று இறுதி விசாரணைக்கு வந்து இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்து ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

## தீர்ப்புரை

## அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிக்கையின் சுருக்கம்

1) இவ்வழக்கின் சாட்சி-1 ஆனவர் ராதா வுட் ஒர்க்ஸ் என்ற பெயரில்

கடை நடத்தி வருவதாகவும் கடந்த 19.01.2025ம் தேதி விடுமுறை என்பதால் 18.01.2025ம் தேதி மாலை 18:00 மணியளவில் தனது கடையை பூட்டிவிட்டு கடை பக்கத்தில் உள்ள இடத்தில் இரண்டு தேக்கு மர சோபா இரண்டையும் சேர்த்து இரும்பு சங்கிலியால் கட்டி பூட்டு போட்டுவிட்டு சென்றதாகவும் மறுநாள் 19/01/2025ம் தேதி காலை 06:00 மணியளவில் சாட்சி-1 தனது கடைக்கு வந்து பார்த்தபோது கடை பக்கத்தில் இருந்த சுமார் ரூ.45,000/- மதிப்புள்ள இரண்டு தேக்கு மர சோபா இரண்டையும் இவ்வழக்கின் எதிரி சுயலாபம் அடையும் நோக்கில் திருடி சென்றதாக எதிரி மீது பிரிவு 303(2) BNS-ன் கீழ் ஆரோவில் காவல் நிலைய உதவி ஆய்வாளர் ஒரு குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான பிறகு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் நகல்களும் BNSS 230 பிரிவின் கீழ் முறையாக இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு, எதிரியிடம் குற்றம் பற்றி வினவியபோது, எதிரி தான் குற்றவாளி அல்ல என்று குற்றத்தினை மறுத்தார். எனவே இருதரப்பும் கேட்கப்பட்டும் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரி மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்த காரணத்தினால், எதிரி மீது பிரிவு 303(2) BNS-ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி கூறி வினவியபோதும், எதிரி குற்றவாளி அல்ல என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்காட விருப்பம் தெரிவித்தார். எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) அரசுத்தரப்பில் 1 முதல் 7 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அதில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்று பொருளின் புகைப்படம் மற்றும் சி.டி. சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணம் மற்றும் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-

இவ்வழக்கின் சாட்சி-1 ஆனவர் ராதா வுட் ஓர்க்ஸ் என்ற பெயரில் கடை நடத்தி வருவதாகவும் கடந்த 19.01.2025ம் தேதி விடுமுறை என்பதால் 18.01.2025ம் தேதி மாலை 18:00 மணியளவில் தனது கடையை பூட்டிவிட்டு கடை பக்கத்தில் உள்ள இடத்தில் இரண்டு தேக்கு மர சோபா இரண்டையும் சேர்த்து இரும்பு சங்கிலியால் கட்டி பூட்டு போட்டுவிட்டு சென்றதாகவும் மறுநாள்19/01/2025ம் தேதி காலை 06:00 மணியளவில் சாட்சி-1 தனது கடைக்கு வந்து பார்த்தபோது கடை பக்கத்தில் இருந்த சுமார் ரூ.45,000/- மதிப்புள்ள இரண்டு தேக்கு மர சோபா இரண்டையும் இவ்வழக்கின் எதிரி சுயலாபம் அடையும் நோக்கில் திருடி சென்றுள்ளார்.

6) அதை தொடர்ந்து 23/01/2025 அன்று 11:00 மணியளவில் திருமதி.ராதா க/பெ. ஜீவரத்தினம், கூடப்பாக்கம் கிராமம், புதுச்சேரி மாநிலம் என்பவர் ஆரோவில் காவல் நிலையத்தில் புகார் அ.சா.ஆ.1ஐ கொடுத்தார். அவர் கொடுத்த புகாரை நிலைய பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளர் திரு.செந்தில்குமார் பெற்று காவல் நிலைய குற்ற எண்.36/2025 பிரிவு 303(2) BNS-ன் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 பதிவு

செய்தார். அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் சூரியா மற்றும் முருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் அ.சா.ஆ.3 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 தயார் செய்தா. அன்றைய தினமே 14 00 மணியளவில் எதிரியை கைது செய்து சாட்சிகள் சூரியா மற்றும் முருகன் முன்னிலையில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை (அனுமதிக்கப்பட்ட பகுதியுடன் அ.சா.ஆ.5) பதிவு செய்தார். அன்றைய தினம் மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் 15:30 மணிக்கு எதிரி அவரது வீட்டில் இருந்து எடுத்து ஆஜர்படுத்திய சுமார் 182 செமீ நீளமும் சுமார் 82 செமீ அகலமும் உள்ள மரத்தால் ஆன சோபா1, சுமார் 181 செமீ நீளமும் சுமார் 81செமீ அகலமும் உள்ள மரத்தால் ஆன சோபா 1 ஆகியவைகளை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் (அ.சா.ஆ.6) தயார் செய்தார். இவ்வழக்கில் சாட்சிகள் ராதா, அன்புக்குமார், ஜீவரத்தினம் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்படுத்தினார். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 (அ.சா.ஆ.7) மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். இவ்வழக்கில் புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவு 303(2) BNS-ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

07) இவ்வழக்கில் புகார்தாரர் திருமதி.ராதா அ.சா.1 ஆகவும், திரு.சூரியா அ.சா.2 ஆகவும், திரு.முருகன் அ.சா.3 ஆகவும், திரு.ஜீவரத்தினம் அ.சா.4 ஆகவும், உதவி ஆய்வாளர் திரு.செந்தில்குமார் அ.சா.5 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

08) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிய பகுதிகளை எடுத்துரைத்து பிரிவு 351 (1)

(b)BNSS-ன் கீழ் சுட்டிக்காட்டி வினவியபோதும் எதிரி அரசு தரப்பு சாட்சி கூறுவதை மறுத்து, தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை என்று கூறினார். இத்துடன் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

09) இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது. வழக்கின் ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

10) இந்த வழக்கில் முடிவு செய்யப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பு எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை தகுநிலை ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா என்பதேயாகும்?

11) எதிரி மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டான 303(2) BNS பிரிவை அரசு தரப்பு நிரூபித்துள்ளதா என்பதை அரசு தரப்பு ஆவணங்கள் மற்றும் சாட்சிகளின் சாட்சிகளை வைத்து பார்க்கும்பொழுது,

"303(2) BNS என்பது ஒருவரின் அனுமதியின்றி, நேர்மையற்ற முறையில் அசையும் சொத்தை அபகரிக்கும் செயல் ஆகும்"

12) புகார்தாரரான திருமதி. ராதா தனது புகாரில், "கடந்த 19/01/2025ம் தேதி விடுமுறை என்பதால் 18.01.2025 அன்று மாலை 06:00 மணிக்கு கடையை பூட்டிவிட்டு பக்கத்தில் உள்ள இடத்தில் இரண்டு தேக்கு மர ஷோபாவை சேர்த்து சங்கிலியால் கட்டிவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். மறுநாள் காலை 06:00 மணிக்கு வந்து பார்த்தபோது இரண்டு சோபாவையும் யாரோ திருடி சென்றுவிட்டார்கள். அதன் மதிப்பு சுமார் ரூ.45,000/- ஆகும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

13) அவர் அ.சா.1 ஆக இந்நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கையில் அவரது புகாரை ஒத்து சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கில் பார்வை மகசர்,

எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளான திரு.சூரியா அ.சா.2 ஆகவும் திரு.முருகன் அ.சா.3 ஆகவும் சாட்சியமளித்துள்ளார்கள். அவர்கள் தங்களது நீதிமன்ற சாட்சியத்தில் தங்களிடம் காட்டப்படும் பார்வை மகசர், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் தங்கள் கையொப்பம் இல்லை என்றும், வழக்கு சம்மந்தமாக தங்களுக்கு எந்த விவரமும் தெரியாது என்றும், போலீசார் தங்களை விசாரிக்கவில்லை என்று அரசு தரப்புக்கு பிறழ்ந்து சாட்சியமளித்துள்ளார்கள். மேலும் அ.சா.1ன் கணவர் திரு.ஜீவரத்தினம் என்பவர் அ.சா.4 ஆக சாட்சியமளித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில் அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்து சாட்சியமளித்துள்ளார்.

14) இவ்வழக்கில் எதிரி கைது செய்யப்பட்டபோது அவர் கொடுத்தததாக சொல்லப்படும ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசருக்கு சாட்சிகளாக இருந்த மேற்படி சாட்சிகள் அ.சா.2 மற்றும் அ.சா.3 இருவரும் வழக்கு சம்மந்தமாக எந்த விபரமும் தெரியாது என சாட்சியமளித்துள்ளனர். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.5 ஆக சாட்சியமளித்துள்ளார். அவர் புகாரை பெற்று எதிரியை கைது செய்து புலன் விசாரணை மேற்கொண்டதை பற்றி சாட்சியமளித்துள்ளார்.

15) அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் மேற்படி சோபாக்களை யார் திருடிசென்றார்கள் என்று தனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும், திருடிசென்றவரை தான் பார்க்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1ன் கணவரான அ.சா.4ம் தனது குறுக்கு விசாரணையில் மேற்படி சோபாக்களை யார் திருடிசென்றார்கள் என்று தனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும், திருடிசென்றவரை தான் பார்க்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.4 சாட்சிகள் அவர்களது

சாட்சியத்தில் அ.சா.1ன் சோபாக்கள் திருடு போய்விட்டது என்று சாட்சியமளித்துள்ளபோதிலும் எதிரிதான் அ.சா.1ன் பொருட்களை திருடி சென்றார் என்று எந்தவொரு சாட்சிகளும் உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் பார்வை மகசர், ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 இருவரும் வழக்கு சம்மந்தமாக தங்களுக்கு எதுவும் தெரியாது என்று அரசு தரப்புக்கு பிறழ்ந்து சாட்சியமளித்துள்ளது இவ்வழக்கில் தொய்வை ஏற்படுத்துகின்றது.

16) மேற்படி சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் அ.சா.1 மற்றும் அ.சா.4 கணவன் மனைவி ஆவர். அ.சா.1 மற்றும் அ.சா.4 சாட்சிகளின் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் அ.சா.1ன் சோபாக்கள் திருடு போனதாக சாட்சியமளித்துள்ளனர். இருப்பினும் அ.சா.1 மற்றும் அச.ா.4 எதிரி சோபாக்களை திருடி சென்றதை நேரில் பார்த்ததாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. மேலும் எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசருக்கு சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 மேற்படி சோபாக்களை உதவி ஆய்வாளர் எதிரியிடமிருந்துதான் கைப்பற்றியதாக அரசு தரப்பு வழக்கிற்கு உறுதியூட்டும் வகையில் சாட்சியமளிக்கவில்லை.

17) புலனாய்வு அதிகாரி அ.சா.5 எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக சொல்லப்படும் கைப்பற்றுதல் மகசருக்கு சாட்சிகளாக இருந்த அ.சா.2 மற்றும் அ.சா.3 பிறழ் சாட்சிகளாக மாறியுள்ள நிலையில் எதிரிதான் அ.சா.1ன் சோபாக்களை திருடினார் என்று நேரடி சாட்சிகளைளோ அல்லது சூழ்நிலை சாட்சிகளோ முன்னிலைப்படுத்தி அரசு தரப்பு தங்களது வழக்கை நிரூபிக்கவில்லை

என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

18) இவ்வாறான சூழ்நிலையில் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்குவது நீதியின்பால் உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே எதிரியின் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் போதுமான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக**

19) மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, அரசு தரப்பில் இவ்வழக்கினை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக முடிவு செய்து, எதிரி மீது வனையப்பட்டுள்ள பிரிவு 303(2) BNS-ன் கீழான குற்றச்சாட்டை ஐயம்திரிபற அரசு தரப்பு நிரூபிக்கவில்லை என தீர்மானித்து, எதிரியை மேற்சொன்ன பிரிவின் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை BNSS 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

20) இவ்வழக்கின் வழக்கு சொத்து எண்.51/2025ல் உள்ள 182 செ.மீ நீளமும் சுமார் 82 செ.மீ அகலமும் உள்ள மரத்தால் அன சோபா1, சுமார் 181 செ.மீ நீளமும் சுமார் 81 செ.மீ அகலமும் உள்ள மரத்தால் ஆன சோபா 1 ஆக இரண்டு சோபாக்கள் அதன் உரிமையாளர் மனுதாக்கல் செய்து பெற்றுச்சென்றுள்ள படியால் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் நிரந்தரமாக உரிமையாளரே மேற்படி சோபாக்களை வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு மேற்படி வழக்கு சொத்தின் பிணைப்பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

21) எதிரி ஏற்கனவே பிணையிலிருந்து வந்துள்ள நிலையில், மேல்முறையிட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லை எனில் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரியின் பிணைப்பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பு முழுவதும் என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

N PREETHI

Digitally signed by N PREETHI
Date: 2026.05.04 16:05:43 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வானூர்.

<u>பின் இணைப்பு -</u>
<u>அரசுத்தரப்பு சாட்சிகள்</u>

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. ராதா |
| அ.சா.2 | திரு.சூரியா |
| அ.சா.3 | திரு.முருகன் |
| அ.சா.4 | திரு.ஜீவரத்தினம் |
| அ.சா.5 | திரு.செந்தில்குமார், உதவி ஆய்வாளர் |

<u>அரசுத்தரப்பு சாண்றாவணம்</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 23/01/2025 | புகார் |
| அ.சா.ஆ.2 | 23/01/2025 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 23/01/2025 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.4 | 23/01/2025 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 23/01/2025 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.6 | 23/01/2025 | கைப்பற்றுதல் மகசர் |
| அசா.ஆ.7 | 01/03/2025 | படிவம் 91 |

<u>அரசுத்தரப்பு சான்று பொருள்</u> -

சா.பொ.1 இரண்டு சோபாக்களின் புகைப்படம் மற்றும் சி.டி.

<u>எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுபொருள்</u> - இல்லை.

N PREETHI

Digitally signed by N PREETHI
Date: 2026.05.04 16:05:54 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வானூர்.